# தூத்துக்குடி மாநகராட்சி

Phone No. 0461- 2326901-903 Email. Commr.thoothukudi@tn.gov.in

## சாதாரணக் கூட்டப்பொருள்

2009ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 15ஆம் தேதி வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு 2008ஆம் வருடத்திய தூத்துக்குடி மாநகராட்சி சட்டம் அட்டவணை I பிரிவு எண் 3(1)ன் கீழ் தூத்துக்குடி மாநகராட்சி அலுவலகம் இராவ்பகதூர் குரூஸ்பர்னாந்து கட்டிடத்திலுள்ள கூட்ட மண்டபத்தில் நடைபெறும் சாதாரணக் கூட்டத்தில் கீழ்க்கண்ட பொருள்கள் ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

## பொருள்கள்

1) இம்மாநகராட்சிக்கு 2009–2010ம் நிதியாண்டிற்கு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் மாண்புமிகு தமிழக சமூகநலத்துறை அமைச்சர் மற்றும் தூத்துக்குடி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கீழ்க்கண்ட பணிகளை பரிந்துரை செய்து, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறை ஆணை எண் அ2/2357/2009 நாள் 25–08–2009ல் நிர்வாக அனுமதி வழங்கி உள்ளதை மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ லட்சத்தில்) |
|---|---|---|
| 1) | தூத்துக்குடி மாநகராட்சி 51வது வார்டு ஆசிரியர் காலனி முதல் தெருவில் தார்ச் சாலை அமைத்தல் | 5.00 |
| 2) | தூத்துக்குடி மாநகராட்சி 16வது வார்டு சூசையப்பர் கோவில் பகுதியில் தார்ச்சாலை அமைத்தல் 180 மீட்டர் | 2.50 |
| 3) | தூத்துக்குடி மாநகராட்சி 7வது வார்டு முத்துக்கிருஷ்ணாபுரம் 6வது தெரு, பிள்ளையார்கோவில் பின்புறம் ,முக்கு சந்தில் சிமெண்ட் சாலை அமைத்தல் | 5.15 |
| 4) | தூத்துக்குடி மாநகராட்சி வார்டு எண்.22ல் அந்தோணியார் கோவில் சின்ன சந்தில் தார்ச் சாலை அமைத்தல் | 6.50 |
| 5) | தூத்துக்குடி மாநகராட்சி வார்டு எண்.29 வடக்கு ரதவீதியில் லயன்கம்பெனி சந்தில் தார்ச்சாலை அமைத்தல் | 2.60 |
| 6) | தூத்துக்குடி மாநகராட்சி வார்டு எண். 38 மீனாட்சிபுரத்தில் பொது விநியோக கடை கட்டுதல் | 3.25 |
| 7) | தூத்துக்குடி மாநகராட்சி காரப்பேட்டை நாடார் பள்ளி அருகில் வடிகால் அமைத்தல் | 3.80 |
| 8) | தூத்துக்குடி மாநகராட்சி சிவன் கோவிலில் பொதுக்கழிப்பிடம் அமைத்தல் | 1.00 |

| | | |
|---|---|---|
| 9) | தூத்துக்குடி மாநகராட்சி எஸ்.கே.எஸ்.ஆர். காலனியில் பைப் லைன் அமைத்தல் | 6.50 |
| 10) | தூத்துக்குடி மாநகராட்சி வார்டு எண். 41 அண்ணாநகர் 7வது தெருவிலிருந்து ராஜகோபால் நகர் வரை மழைநீர் வடிகால் கட்டுதல் | 3.00 |
| 11) | தூத்துக்குடி மாநகராட்சி வார்டு எண். 41 அண்ணாநகர் மகிழ்ச்சி புரத்திலிருந்து ராஜகோபால் நகர் வரை மமைழநீர் வடிகால் அமைத்தல். | 3.00 |
| 12) | தூத்துக்குடி மாநகராட்சி லையன்ஸ் டவுண் மற்றும் மினி சகாயபுரம் பகுதியில் பகிர்மானக் குழாய் அமைத்தல் | 4.40 |
| | மொத்தம் | 46.70 |

**அலுவலகக் குறிப்பு –** மாமன்றம் பதிவு செய்யலாம்.

இ1/12409/09

**தீர்மானம் எண்: 171**

அலுவலகக் குறிப்புப்படி பதிவு செய்யப்பட்டது

2. இம்மாநகராட்சி பொது சுகாதாரம் 1 முதல் 10 வரை உள்ள சுகாதார பிரிவுகளுக்கு 2009–10ம் ஆண்டிற்கு தேவையான கிருமி நாசினிகள் 1) சுண்ணாம்புத்தூள் 50டண் 2) பிளிச்சிங்பவுடர் 3 டன் 3) கருப்பு பினாயில் கிரேடு I – 1500 லிட்டர் ஆகிய பொருட்கள் வாங்கிக் கொள்ள ஏற்படும் உத்தேச செலவினத் தொகை ரூ 3.50 லட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு –** அனுமதிக்கலாம். எச்1/5121/09

**தீர்மானம் எண்: 172**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

3.இம்மாநகராட்சி 1முதல் 10 வரையுள்ள பொது சுகாதார பிரிவுகளுக்கு 2009–10ம் ஆண்டிற்கு தேவையான தளவாடச்சாமான்கள் வாங்கிக் கொள்ளவும் அதற்கான உத்தேச செலவினத் தொகை ரூ 3.85 லட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு–** அனுமதிக்கலாம்.

எச்1/ 5236/09

**தீர்மானம் எண்: 173**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

4. இம்மாநகராட்சி பொது சுகாதார மலேரியா பிரிவில், மாநகராட்சி பகுதிகளில் மழை காலம் வர இருப்புதால் கொசு மற்றும் ஈ தொல்லை மிகவும் அதிகமாக உள்ளது. இதனால் தொற்று நோய் பரவும் அபாயம் உள்ளது. எனவே கொசு மற்றும் ஈக்களை ஒழிக்க Fenthion 82.5% EC மற்றும் MosQuito Larvicide Oil) ஆகிய பூச்சி கொல்லி மருந்துகள் முறையே 100லிட்டர் மற்றும் 500லிட்டர் தேவையாக உள்ளது. சென்னை, நகராட்சிகளின் நிர்வாக இயக்குநர் அவர்களின் நே.மு.க.எண் 60560/06/ஜெ2 நாள் 12.09.2009ல் இதனை வாங்க பரிந்துரை செய்துள்ளார்கள். அவசர அவசியம் கருதி இந்த வேதி மருந்துகளை வாங்குவதற்காக ஆகும். உத்தேச செலவுத் தொகை ரூ2.75 லட்சமாகும் (ரூபாய் இரண்டு

லட்சத்து எழுபத்தி ஐயாயிரம் மட்டும்) தொகையை மாநகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்ய மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** – 1 அனுமதிக்கலாம்.

2. மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை எடுத்ததையும் மாமன்றம் அங்கீகரிக்கலாம்.

எச்4/10463/09

**<u>தீர்மானம் எண்: 174</u>**

அலுவலகக் குறிப்பு 1 அனுமதிக்கப்பட்டது, அலுவலகக் குறிப்பு 2 அங்கீகரிக்கப்பட்டது.

5. இம்மாநகராட்சியில் பணியாற்றும் மாநகர சுகாதார செவிலியர்கள் மகப்பேறு உதவியாளர்கள் ஆகியோர்களுக்கு 2008– 09ம் வருடத்திற்கு சீருடைப்படி வழங்குவதற்கு, அரசாணை எண். 236 நாள் 01.06.2009ன் படி வழங்குவதற்கு தலா ரூ. 750/– வீதம் இருபத்தி மூன்று பேர்களுக்கு தொகையாக ரூ 17250/–ம் மற்றும் நான்கு சுகாதார பார்வையாளர்களுக்கு சீருடைப்படியாக தலா ரூ . 1200/– வீதம் வழங்க தொகையாக ரூ,4800/–ம் மொத்தமாக ரூ. 22050/– தேவைப்படுகிறது. மேற்படி தொகையை மாநகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்ய மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

எச்4/2307/09

**<u>தீர்மானம் எண்: 175</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

6. தூத்துக்குடி மாநகராட்சி குருஸ்புரம் சர்வே வார்டு 6 பிளாக் 14 புல எண்.1741/1 பி4ல் உள்ள இடம் தனக்குரியது என்றும் மேற்படி இடத்திற்கு சொத்து வரி செலுத்தி வருவதாகவும் தெரிவித்து வாதி திரு. சிந்தாதிரை ஆரோக்கியம் செல்வின் என்பவர் தூத்துக்குடி முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் I.A.No. 513/2009 வழக்கினை தொடர்ந்துள்ளார். மேற்படி புல எண்களுக்குரிய மனை இவ்வழக்கில் குறிப்பிடப்பட்டிருக்கும் 5வது பிரதிவாதிக்கு சொந்தமானது இல்லை என்றும் நில அளவை ஆவணங்களில் மற்றும் ரெவின்யு ரிக்கார்டுகளில் தனது பெயர்க்கு பெயர் மாற்றம் செய்து தரக்கோரியும் மாநகராட்சி ஆணையரை 4வது பிரதிவாதியாக குறிப்பிட்டு வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கில் மாநகராட்சி சார்பில் மாநகராட்சி வழக்கறிஞர் ஆஜராகி வழக்கினை நடத்தவும் அதற்காகும் செலவினங்களுக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** – மன்றம் அனுமதிக்கலாம்.

எப்1. 13810/09

**<u>தீர்மானம் எண்: 176</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

7. இம்மாநகராட்சி பகுதி பாளையங்கோட்டை ரோடு மேற்கு மில்லர்புரம் வார்டு சி பிளாக் எண்.19 நகரளவு எண். 3, 4, 5 மற்றும் 6ல் மனைப்பிரிவு ம.வ./ந.ஊ. இ ல் 1224/90ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி மனைப்பிரிவில் நகரளவு எண் 5/5 மற்றும் 6/3ல் அங்கீகரிக்கப்பட்ட பூங்கா அமைகிறது. மேற்படி மனைப்பிரிவில் அமையும் பூங்கா பகுதி சர்வே எண் 5/5 மற்றும் 6/3 பகுதியில் 2966.56 சதுர மீட்டர் (73.28 சென்ட்) இடத்தினை 16.9.97ம் தேதியில் மாநகராட்சிக்கு தானபத்திரம் மூலம் பதிவு செய்து ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஆனால் நகரளவை ஆவணத்தில் தவறுதலாக நகரளவு எண் 6/3 இடம் முழுவதும் மாநகராட்சி பூங்கா என உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது. அதே மனைப்பிரிவில் தனியார்க்கு பாத்தியப்பட்ட இடத்தில் கட்டிடங்கள் கட்ட தடை செய்யப்பட்ட பகுதியாகவும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் மேற்படி பகுதிவாழ் மக்களின் தேவைக்காக வாம்பே திட்டத்தின் கீழ் சுகாதார வளாகம் மேற்படி இடத்தில் மாநகராட்சி மூலம் கட்டப்பட்டுள்ளது. மேற்படி மனைப்பிரிவின் உரிமையாளர் திரு எஸ்.பி. மனோகரன் என்பவர் மேற்படி இடம் தங்களுக்கு பாத்தியமானது என 9–3–2004ம் தேதி விண்ணப்பம் செய்ததின் பேரில் ஆவணங்களை பரிசீலனை செய்ததில் மேற்படி இடம் தவறுதலாக மாநகராட்சி பூங்கா என உட்பிரிவு செய்யப்பட்டது கண்டறியப்பட்டது. மேற்படி சுகாதார வளாகம் கட்டப்பட்டுள்ள இடம் மனுதாரக்கு பாத்தியமான இடமாகும். எனவே மனுவில் மேற்படி சுகாதார வளாகம் கட்டிய கட்டிடம் உள்ள இடத்திற்கு பதிலாக பூங்காவிற்கு ஒதுக்கப்பட்ட பகுதியில் 976 சதுரமீட்டர் (10500 சதுர அடி) இடத்தினை கேட்டதின் தொடர்பாக நகர்மன்ற தீர்மான எண் 1268 நாள் 29–9–2004ன்படி ஒப்புதல் அளிக்கப்பட்டு அரசுக்கு பிரேரணை அனுப்பப்பட்டு நிலுவையில் உள்ளது.

இந்நிலையில் சுகாதார வளாகம் அமைந்துள்ள இடம் அதனை சுற்றியுள்ள பொதுமக்களின் நலனை கருத்தில் கொண்டு அவர்களின் தேவைக்காக கட்டப்பட்டுள்ளது. மேலும் மேற்படி பகுதியானது அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவில் கட்டிடம் கட்டுவதற்கு தடை செய்யப்பட்ட பகுதியாகும். மேற்படி இடத்தில் சுகாதார வளாகம் 286 சதுர மீட்டர் மற்றும் செப்டிக் டேங்க் 78 சதுர மீட்டர் பரப்பளவில் 2004ம் வருடத்தில் கட்டப்பட்டுள்ளது.

மனுதாரக்கு மாற்று இடம் பூங்கா பகுதியில் கொடுப்பதினால் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவில் ஒதுக்கப்பட்ட பூங்காவின் பரப்பளவு குறைவதோடு மக்களின் வசதிக்கேற்ப பூங்காவாக பராமரிக்கவும் சிரமம் ஏற்படும். மேலும் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவில் ஒதுக்கப்பட்ட பொது உபயோகம் பரப்பளவு குறைவதால் மனைப்பிரிவு அங்கிகாரம் நிலை நிறுத்த இயலாது.

மேலும் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதல் அரசாணை எண் 730 நாள் 14–4–76ன் படி மாநகராட்சிக்கு பாத்தியமான இடத்தினை தனியார் மற்றும் வேறு துறைகளுக்கு மாற்றம் செய்ய தடைசெய்யப்பட்டுள்ளது. மேலும் சென்னை உயர்நீதிமன்ற W.A.NO. 156/2000 மற்றும் W.A.NO 45/2008 தீர்ப்பில் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவில் பொது உபயோகத்திற்கு ஒதுக்கப்பட்ட இடத்தினை வேறு உபயோகத்திற்கு பயன்படுத்தக்கூடாது என உத்திரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

எனவே பொது மக்களின் நலனை கருத்தில் கொண்டு சுகாதார வளாகம் கட்டப்பட்டுள்ளதால் மேற்படி சுகாதார வளாகம் கட்டிடம் கட்டப்பட்டுள்ள பகுதி 364 சதுர மீட்டர் இடத்தினை மட்டும் அதற்குண்டான தொகையை செலுத்தி மாநகராட்சி எடுத்துக்கொள்ளவும் மேற்படி இடத்திற்கு அன்றைய Guide line valve படி விலை நிர்ணயம் செய்து மனுதாரக்கு மேற்படி தொகையை வழங்கவும் அரசின் ஒப்புதல் பெற கருத்துரு அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** – அரசின் ஒப்புதல் பெற கருத்துரு அனுப்பலாம்.

ஜி1/ 5827/04

**<u>தீர்மானம் எண்: 177</u>**

அலுவலகக் குறிப்புப்படி அரசின் ஒப்புதல் பெற கருத்துரு அனுப்ப தீர்மானிக்கப்பட்டது.

8. இம்மாநகராட்சி பகுதியில் வார்டு எண் 11 பிளாக் எண் 9 நகரளவு எண் 1139/2 பாகம் மற்றும் 1139/3பி பாகத்தில் ஒப்புதலளிக்கப்பட்ட மனைப்பிரிவில் பூங்காவிற்கு என தான பத்திரம் மூலம் நகராட்சிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட இடத்தினை குடியிருப்பு மனைகளாக மாற்ற ஒப்புதலளிக்கப்பட்ட அரசாணையை ரத்து செய்து பிறப்பிக்கப்பட்ட அரசாணை (பத்தாண்டு) 58 ந.நி. (ம) கு.வ. (ந.நி.1) துறை நாள் 12–2–98யை எதிர்த்து வாதி திரு குழந்தை பொன்னான்டோ மற்றும் நால்வர் தூத்துக்குடி சப்கோர்ட்டில் ஒ.எஸ்.எண். 157/09 in I.A. 483/09 ல் வழக்கு தொடர்ந்துள்ளார்கள். மேற்படி வழக்கில் நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கு துறை அரசு செயலரை முதல் பிரதிவாதியாகவும் மாநகராட்சி ஆணையர் இரண்டாவது பிரதிவாதியாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே மேற்படி வழக்கில் மாமன்ற வழக்கறிஞர் மற்றும் அரசு வழக்கறிஞர் மாநகராட்சி சார்பில் மற்றும் அரசு சார்பில் ஆஜராகி வழக்கினை நடத்தவும் அதற்காகும் செலவினங்களுக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு –** மன்றம் அனுமதிக்கலாம்.

எப்1. 15462/09

**<u>தீர்மானம் எண்: 178</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

9. இம்மாநகராட்சி பொது சுகாதாரப் பிரிவு துப்புரவு பணியாளர்கள், மேற்பார்வையாளர்கள், வாகன ஓட்டுநர்கள், துலக்குனர்கள் மற்றும், அலுவலக உதவியாளர்களுக்கும் 2009ம் வருடத்திற்கான சீருடைகள் 50 சதவீதம் தமிழ்நாடு கதர் கிராமத்தொழில் வாரியத்திலிருந்தும் 50 சதவீதம் கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்திலிருந்தும் வாங்குவதற்கும் மற்றும் தையற்கூலி வழங்க உத்தேச செலவுத் தொகை ரூ 7.50 லட்சத்தை பொது நிதியிலிருந்து பெறவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** அனுமதிக்கலாம்.

எச்4/14977/2009

**<u>தீர்மானம் எண்: 179</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது.

10. இம்மாநகராட்சியின் பயன்பாட்டிற்காக தட்டச்சுப்பிரிவில் பயன்படுத்தப்பட்டு வரும் ஜெராக்ஸ் இயந்திரத்தினை நல்லமுறையில் பராமரிக்கும் பொருட்டு, ஜெராக்ஸ் இயந்திரத்திற்கு விநியோகம் செய்த கம்பெனியின் டீலர் மெஸ்ஸர்ஸ் பிரண்ட்ஸ் கம்யூட்டர் பாளையங்கோட்டை நிறுவனத்தினர் கடந்த ஒரு வருடமாக மாதாந்திர பராமரிப்பு பணியினை ரூ 5612/–க்கு செய்து வந்தனர். தற்போது வருடத்திற்கு ரூ 5515/–க்கு (ரூபாய் ஐந்தாயிரத்து ஐநூற்றி பதினைந்து மட்டும்) மூன்று மாதத்திற்கு ஒரு முறை ரூ 1378/– வீதம் மாதந்தோறும் பராமரித்து வர விருப்பம் தெரிவித்து கடிதம் வழங்கியுள்ளனர். வருடாந்திர பராமரிப்பினை 01–03–2009 முதல் வழங்க அனுமதித்தும் செலவினத்தை பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** – டீலராக இருப்பதாலும் கடந்த வருடத்தின் தொகையினை விட குறைவாக இருப்பதாலும் அனுமதிக்கலாம்.

இ1/3334/2007

**<u>தீர்மானம் எண்: 180</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது.

11. தூத்துக்குடி மாநகராட்சியில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வரும் திரு து. பாலாஜி என்பவர் தன்னுடைய வயதான தாயாரையும் தன் மனைவி மற்றும் குழந்தையை கவனிக்க வேண்டியதிருப்பதால் குடும்ப சூழ்நிலை காரணமாக திருநெல்வேலி மாநகராட்சிக்கும் திருநெல்வேலி மாநகராட்சி மேலப்பாளைய மண்டலத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரியும் திரு ப. சண்முகையா என்பவர் தூத்துக்குடி மாநகராட்சிக்கும் பரஸ்பர பணியிட மாறுதல் செய்ய கோரியுள்ள விண்ணப்பங்கள் இம்மாநகராட்சியில் பெறப்பட்டுள்ளது.

இம்மாநகராட்சி இளநிலை உதவியாளர் திரு து. பாலாஜி திருநெல்வேலி மாநகராட்சிக்கும் திரு ப. சண்முகையா என்பவர் தூத்துக்குடி மாநகராட்சிக்கு பரஸ்பர பணியிட மாறுதல் கோரிய விண்ணப்பங்கள் மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** – இளநிலை உதவியாளர் திரு. து. பாலாஜி என்பவரது கோரிக்கையினை ஏற்று பரஸ்பர பணியிட மாறுதலுக்கு அனுமதி அளிக்கலாம்.

சி2/ 14493/2009

**<u>தீர்மானம் எண்: 181</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதி அளிக்கப்பட்டது

12. இம்மாநகராட்சி பகுதியில் அமைந்துள்ள தூத்துக்குடி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவ மனை முதல்வர் அவர்களின் 28–07–2009ம் தேதிய ந.க.எண். 1151/தி & வ/09 கடிதத்தில், பொதுப்பணித்துறை மூலமாக ரூ 9.70 லட்சம் மதிப்பீட்டில் மருத்துவ கல்லூரி மருத்துவமனையிலிருந்து கழிவுநீரை மாநகராட்சிக்கு சொந்தமான இடங்களில் குழாய்கள் அமைத்து, தூத்துக்குடி காய்கனி மார்க்கெட் கழிவு நீர் கிணற்றுடன் சேர்த்துக் கொள்ள தடையின்மை சான்று வழங்க கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** 1 அனுமதிக்கலாம்
2. ரூ 18000/– வைப்புத் தொகை செலுத்த தெரிவிக்கலாம்
3. ரூ 220/– மாதாந்திர கட்டணம் செலுத்த தெரிவிக்கலாம்.

.இ1/12893/09

**தீர்மானம் எண்: 182**

அலுவலகக் குறிப்பு 1, 2 மற்றும் 3 அனுமதிக்கப்பட்டது

13. இம்மாநகராட்சியின் 2007–2008ம் ஆண்டிற்குரிய கணக்குகள் முடித்து உடனிகழ் தணிக்கை பிரிவு உள்ளாட்சி நிதி தணிக்கை துறைக்கு அனுப்பப்பட்டதில் உதவி இயக்குநர் உடனிகழ் தணிக்கைத்துறை தூத்துக்குடி தனது கடித ந.க. எண். அ1/340/06 நாள் 23–07–2009ல் மேற் கணக்குகளை சரி செய்து மீள அனுப்புமாறு தெரிவிக்கப்பட்டது. புதிய இயல்பு நிலை கணக்கு முறைப்படி 24 அட்டவணைகள் தேய்மானம் கணக்கிடுதல் சொத்தாக்கம் செய்தல் போன்ற பல்வேறுவற்றை கணக்கிட்டு ஆண்டுக் கணக்குடன் இணைக்கம் செய்ய வேண்டியதிருப்பதாலும் குறிப்பிட்ட கால அவகாசத்திற்குள் கணக்குகளை சரி செய்து அனுப்ப வேண்டியதிருப்பதாலும் பணியாளர்கள் பற்றாற்குறையாக இருப்பதாலும் இதற்கு முந்தைய ஆண்டுகளில் தனியார் கணக்கு பணியாளர் மூலம் முடிக்கப்பட்டுள்ளது போல் இவ்வாண்டும் 2007–2008 கணக்குகளை தனியார் கணக்கு பணியாளர் (Consultant) மூலம் முடிக்கவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ 25,000/–க்கு மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
**அலுவலகக் குறிப்பு** – மாமன்றம் அனுமதிக்கலாம்

பி1/28211/2008

**தீர்மானம் எண்: 183**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

14. இம்மாநகராட்சியில் குழாய் ஆய்வாளர்களாக பணிபுரியும் திரு எம். பெரியசாமி 2) திரு எ. எட்வின்ஞானக்கண்ராஜா 3) திரு ஜே. நிக்ஷன் 4) திரு. பி. செல்வராஜ் 19–7–09ம் தேதிய விண்ணப்பத்தில் மாநகராட்சி பணிவிதிகளில் குழாய் ஆய்வாளர் பணியிடம் செயல்திறன் உதவியாளர் நிலை 2ல் (Skilled Assistantt. Gr.II) வகைப்படுத்தப்பட்டுள்ளதாகவும் குழாய் ஆய்வாளர் ( Tap Inspector.) மற்றும் வடிகால் ஆய்வாளர் (Drainage Inspector) பணி இடத்திற்குரிய பொது கல்வி தகுதி மற்றும் தொழில் நுட்ப கல்வி தகுதி ( பள்ளி இறுதி வகுப்பு தேர்ச்சி SSLC மற்றும் I.T.I. பிளம்பர் தேர்ச்சி) ஒன்றாக உள்ளதாகவும் மாநகராட்சி பணி விதிகளில் வடிகால் ஆய்வாளர் பணியிடம் தொழில்நுட்ப உதவியாளர் நிலையில் (Technical Assistantt) வகைபடுத்தப்பட்டுள்ளதாகவும் எனவே குழாய் ஆய்வாளர் பணியிடத்தையும் தொழில்நுட்ப உதவியாளர் நிலைக்கு தரம் உயர்த்தி உத்திரவு பிறப்பிக்குமாறு பணிவுடன் கேட்டுள்ளனர்.

மேற்படி விண்ணப்பம் தொடர்பாக கீழ்க்கண்ட விபரங்கள் மாமன்றத்தின் பார்வைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

1) தமிழ்நாடு நகராட்சி பொறியியல் மற்றும் குடிநீர் பணி பணிவிதி 1970படி பொது கல்வித் தகுதி மற்றும் தொழில்நுட்ப கல்வித் தகுதி ஒன்றாக உள்ள

அ) வடிகால் ஆயூவாளர் பணியிடம் (Drainage Inspector,) வகுப்பு 5 வகை 2லும்
(Class V Category 2)

ஆ) குழாய் ஆய்வாளர் பணியிடம் (Tap Inspector) வகுப்பு 7 வகையிலும் (Class VII Category 3) வகைபடுத்தப்பட்டுள்ளது.

2) நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை அரசாணை எண் 237 நாள் 26–09–96ன் படி மாநகராட்சி பணி விதிகள் புதியதாக நிர்ணயம் செய்யப்படும்பொழுது தமிழ்நாடு மாநகராட்சி பொறியியல் மற்றும் குடிநீர் விநியோகம் சார்நிலைப் பணி விதி 1996ல்.

அ) வடிகால் ஆய்வாளர் ( Drainage Inspector) பணியிடம் தொழில்நுட்ப உதவியாளர் (Technical Assstantt) நிலையில் வகை படுத்தப்பட்டுள்ளது (Class III Category 2)

ஆ) குழாய் ஆய்வாளர் பணியிடம் (Tap Inspector) செயல்திறன் உதவியாளர் நிலை II ல் (skilled Assstant Gr.II) வகைப்படுத்தப்பட்டுள்ளது (Class III Category 4)

3)தூத்துக்குடி நகராட்சி 5–8–2008 முதல் மாநகராட்சியாக நிலை உயர்த்தப்பட்டுள்ளது. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை அரசாணை எண் 237 நாள் 26–09–1996ன் படி தூத்துக்குடி மாநகராட்சிக்கு என்று பணிவிதிகள் புதியதாக நிர்ணயம் செய்யப்படவில்லை.

4) வடிகால் ஆய்வாளர் (Drainage Inspector) மற்றும் குழாய் ஆய்வாளர் (Tap Inspector) பணிக்குரிய பொது கல்வி தகுதி மற்றும் தொழில்நுட்ப கல்வி தகுதி ஒன்றாக உள்ள நிலையில் மாநகராட்சி பணி விதிகளில் வடிகால் ஆய்வாளர் பணியிடம் தொழில்நுட்ப உதவியாளர் (Technical Assstantt) நிலையில வகைப்படுத்தப்பட்டுள்ளதால் செயல்திறன் உதவியாளர் நிலை IIல் (Skilled Assistantt. Gr.II) வகைபடுத்தப்பட்டுள்ள குழாய் ஆய்வாளர் பணியிடத்தை தொழில்நுட்ப உதவியாளர் (Technical Assstant) நிலைக்கு தரம் உயர்த்துவது தொடர்பாக தூத்துக்குடி மாநகராட்சியில் பணிபுரியும் குழாய் ஆய்வாளர்களின் விண்ணப்பத்தினை மாமன்ற அனுமதி பெற்று அரசின் பரிசீலனைக்கு அனுப்பலாம்.

**அலுவலகக் குறிப்பு–** மாமன்றம் பரிந்துரை செய்து அரசுக்கு அனுப்பலாம்.

இ2/12144/09

**<u>தீர்மானம் எண்: 184</u>**

அலுவலகக் குறிப்புப்படி அரசின் பரிசீலனைக்கு அனுப்ப பரிந்துரைக்கத் தீர்மானிக்கப்பட்டது.

15. இம்மாநகராட்சியில் அலுவலக உதவியாளராக பணிபுரியும் திருமதி ஏ. ஈஸ்வரி என்பவர் தன்னுடைய குடும்ப சூழ்நிலை காரணமாக போடிநாயக்கனூர் நகராட்சிக்கு பணிமாறுதல் செய்ய கோரியதன் பொருட்டு அன்னாரின் விண்ணப்பம் பரிந்துரை செய்யப்பட்டு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அதன் பேரில் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித எண் ந.க.எண். 335607/08/கே2 நாள் 19–5–2009இன்படி மனுதாரரின் விண்ணப்பத்தின் மீது பரிசீலித்து குறிப்புரை பணி விபரம் மற்றும் மாமன்ற தீர்மானம் பெற்று அனுப்பி வைக்க கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. எனவே அன்னாரின் பணி மாறுதல் விண்ணப்பத்தினை பரிந்துரை செய்து அனுப்பி வைக்க அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** – மன்றம் அனுமதிக்கலாம்.

சி4/6556/09

**<u>தீர்மானம் எண்: 185</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

16. தூத்துக்குடி மாநகராட்சிக்குட்பட்ட பகுதி குருஸ்புரம் தெரு புல எண் 1741 பிளாக் எண் 14 கதவு எண் 195எ, 195பி, 195பி/1 மனைக்கு முன்பு உள்ள ஆக்கிரமிப்பினை தூத்துக்குடி மாநகராட்சி மூலம் அப்புறப்படுத்தக்கோரி திரு. சிந்தாதிரை ஆரோக்கியம் செல்வின் என்பவர் மாநகராட்சி ஆணையரை பிரதிவாதியாக குறிப்பிட்டு மதுரை உயர்நீதிமன்றத்தில் W.P. 9590/2009ல் வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கில் மதுரை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் மாநகராட்சி சார்பில் ஆஜராகி வழக்கினை நடத்தவும் அதற்காகும் செலவினங்களுக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுலவலகக் குறிப்பு –** மன்றம் அனுமதிக்கலாம்.

எப்1.22756/08

**தீர்மானம் எண்: 186**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

17. இம்மாநகராட்சியில் அலுவலக உதவியாளர்களாக பணிபுரியும் திருமதி ஆர். செலின் தங்கபாய் திரு பி. ரவிச்சந்திரன், திரு எஸ். ரவிச்சந்திரன் ஆகியோர் தூத்துக்குடி நகராட்சி ஆணையர் மற்றும் திரு கே. அருணாசலம் இளநிலை உதவியாளர் திரு எம். சேவியர் இளநிலை உதவியாளர் திரு எ. ஜாண்சன் இளநிலை உதவியாளர் திரு எஸ். ஈஸ்வரன் பதிவுறு எழுத்தர் ஆகியோர் மீது தமிழ்நாடு நிர்வாக தீர்ப்பாணையத்தில் 2001ம் ஆண்டு தொடுத்த வழக்குள் ( ஓ.ஏ. 995/01 , 996/01, 997/01) தற்போது சென்னை உயர்நீதி மன்றத்திற்கு மாற்றப்பட்டு நடவடிக்கையில் உள்ளது.

மேற்படி வழக்கில் தூத்துக்குடி மாநகராட்சி சார்பாக திரு எம். தேவதாஸ் கூடுதல் மத்திய அரசு வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகி வழக்காடவும் அதுவகைக்கு ஆகும் செலவினத்திற்கும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு –** மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

இ2/2940/2001

**தீர்மானம் எண்: 187**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதி வழங்கப்பட்டது

18. இம்மாநகராட்சியில் மின்கம்பியாளர்களாக பணிபுரியும் 1) திரு கே. போத்திராஜ் 2) திரு ஜி.எம். கிளாட்வின் 3) திரு எ. சார்லஸ் ஜெயகுமார் ஆகியோர் தங்களை 1–4–1993 முதல் பணிவரன்முறைப்படுத்த வேண்டும் என்றும் அனைத்து பயன்களும் வழங்க வேண்டும் என்றும் சென்னை உயர்நீதிமன்றம் மதுரைகிளையில் 1) அரசு செயலாளர் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சென்னை 2) தூத்துக்குடி மாநகராட்சி ஆணையர் ஆகியோர் மீது வழக்கு தொடுத்துள்ளனர். வழக்கு எண் டபுள்யு.பி. 6813/2009

எனவே மேற்படி வழக்கில் மாநகராட்சி சார்பாக வழக்கறிஞர் திரு. கடற்கரை அவர்கள் ஆஜராகி வழக்காடவும் அதுவகைக்கு ஆகும் செலவினத்திற்கும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
**அலுவலகக்குறிப்பு –**, மாமன்றம் அனுமதி வழங்கலாம்

இ2/12947/09

**தீர்மானம் எண்: 188**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதி வழங்கப்பட்டது

19. நகராட்சி மற்றும் மாநகராட்சி பகுதிகளில் உள்ள விவசாயத்திற்கென்றே பிரத்யோகமாக பயன்படுத்தப்படாமலும், கட்டிடங்கள் இல்லாமலும், அல்லது கட்டிடங்களுக்கு அடுத்தாற்போல் இராமலும் அல்லது கட்டிடங்களை சேர்ந்திராமலும் உள்ள அனைத்து காலிமனைகளுக்கும் காலிமனை மீதான சொத்துவரி விதிப்பு தற்போதுள்ள நடைமுறை தவிர்த்து, மாநகராட்சியை மூன்று பகுதிகளாக பிரித்து சதுர அடி அடிப்படையில் காலியிடத்தின் மீதான சொத்துவரி விதித்து 2009–10 இரண்டாம் அரையாண்டு முதல் (1–9–2009) நடைமுறைப்படுத்த பிறப்பிக்கப்பட்டுள்ள அரசாணை எண் 150 மற்றும் 151 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை நாள் 20–08–2009 மாமன்றத்தின் பார்வைக்குவைக்கப்படுகிறது.

மேற்படி அரசாணையில் காலியிடம் அமைவிடங்களை கீழ்க்கண்ட விபரப்படி மூன்று பகுதிகளாக பிரித்து ஒவ்வொரு பகுதிக்கும் தனித்தனியே குறைந்தபட்சம் மற்றும் அதிகபட்சம் 1 சதுர அடிக்கு அரையாண்டு காலியிடத்தின் மீதான சொத்துவரி அரசால் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

வரித்தொகை (பைசாவில்) 1 சதுர அடிக்கு அரையாண்டுக்கு

| மனை அமைவிடம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் |
|---|---|---|
| அ) குடியிருப்பு பகுதிகள் உள்ள தெருக்கள் | 0.20 | 0.40 |
| ஆ) முக்கிய சாலைகள் மற்றும் பிரதான சாலைகளுக்கு இட்டுச் செல்லும் பேருந்து வழித்தட சாலைகள் அல்லாதவை | 0.30 | 0.50 |
| இ) முக்கிய சாலைகள் மற்றும் பிரதான சாலைகளுக்கு இட்டுச்செல்லும் பேருந்து வழித்தட சாலைகள் | 0.40 | 0.60 |

மேற்படி அட்டவணையின்படி தூத்துக்குடி மாநகராட்சி பகுதியில் உள்ள அனைத்து தெருக்களும் மூன்று பகுதிகளாக பிரித்து தனித்தனியே பட்டியலிட்டு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

மேற்படி அட்டவணையின்படி மூன்று பகுதிகளுக்கும் அரசு நிர்ணயித்துள்ள குறைந்தபட்சம் மற்றும் அதிகபட்சம் வரித்தொகை அளவீட்டிற்குள் உரிய வரியை அந்தந்த உள்ளாட்சி மன்றமே நிர்ணயித்துக்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி மாநகராட்சி வருவாயை கருத்தில் கொண்டும் மாநகராட்சி எதிர்கால வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றும் பொருட்டும் ஒவ்வொரு பகுதிக்கும் உரிய வரியை மாமன்றம் நிர்ணயம் செய்யலாம்.

காலியிட வரிவிதிப்பு தொடர்பாக ஏற்கனவே மாமன்றம் தீர்மானித்துள்ள தீர்மான எண்22 நாள் 29–1–2009ன் படி தற்போது நடைமுறையில் உள்ள காலியிட வரி விகிதத்தை ரத்து செய்து தற்போது பிறப்பிக்கப்பட்டுள்ள அரசாணைகளின்படி காலியிடத்தின் மீதான சொத்துவரி நிர்ணயம் செய்யவும் மேற்படி புதிய வரி விகிதத்தை அரசாணையின்படி 1–9–09 முதல் நடைமுறைப்படுத்தவும் வேண்டப்படுகிறது.

மேலும் தற்போது இம்மாநகராட்சி சொத்துவரி வரி விகிதம் கீழ்க்கண்டவாறு நடைமுறையில் உள்ளது.

| | |
|---|---|
| 1) சொத்து வரி வகைக்கு | 44.50 % |
| 2) குடிநீர் வகைக்கு | 34.78 % |
| 3) கல்வி வரி வகைக்கு | 12.79 % |
| 4)நூல்நிலைய வரி வகைக்கு | 7.93 % |
| மொத்தம் | 100 % |

மேற்கண்ட வரிவிகிதத்தையே தற்போது நிர்ணயம் செய்யப்படும் காலியிடத்தின் மீதான சொத்து வரிக்கும் நடைமுறைப்படுத்தலாம்.

**அலுவலகக் குறிப்பு**

1) அரசாணை எண் 150, 151 ந.நி. (ம) குடிநீர் வழங்கல் (தேர்வு) துறை நாள் 20–8–2009 மன்றம் பதிவு செய்யலாம்.
2) மாநகராட்சி தெருக்களை அட்டவணைபடி மூன்று பகுதிகளாக தனித்தனியே பிரிக்கப்பட்டுள்ள பட்டியலை மன்றம் அனுமதிக்கலாம்.
3) காலியிடத்தின் மீதான சொத்து வரிக்கு தீர்மான எண். 22 நாள் 29–01–09ன் படி தற்போது நடைமுறையில் உள்ள வரி விகிதத்தை ரத்து செய்து அட்டவணையின்படி உள்ள மூன்று பகுதிகளுக்கும் அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைச்தபட்சம் மற்றும் அதிகபட்ச அளவீட்டிற்குள் ஒரு சதுர அடிக்கு , அரையாண்டிற்கு ஒவ்வொரு பகுதிக்கும் தனித்தனியே உரிய வரியை 1–9–09 முதல் மாமன்றம் நிர்ணயம் செய்யலாம்.
4) தற்போது நிர்ணயிக்கப்படும் காலியிடத்தின் மீதான சொத்துவரிக்கும் தற்போது நடைமுறையில் உள்ள சொத்துவரி வரி விகிதத்தையே நடமுறைபடுத்தலாம்.

அ1/16231/09

**தீர்மானம் எண்: 189**

அலுவலகக் குறிப்பு 1 பதிவு செய்யப்பட்டது
அலுவலகக் குறிப்பு 2 அனுமதிக்கப்பட்டது
அலுவலகக் குறிப்பு 3இல் கண்டுள்ளபடி 01.09.09 முதல் ஒரு சதுர அடிக்கு காலிமனை வரியாக (அரையாண்டுக்கு)
'அ' மண்டலத்திற்கு 0.40 பைசா எனவும்,
'ஆ' மண்டலத்திற்கு 0.50 பைசா எனவும்,
'இ' மண்டலத்திற்கு 0.60 பைசா எனவும் நிர்ணயம் செய்யத் தீர்மானிக்கப்பட்டது.
அலுவலகக் குறிப்பு 4 அனுமதிக்கப்பட்டது.

20) காலியிடங்களின் மீதான சொத்துவரி விதிப்பு தொடர்பாக அரசாணை மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் சுற்றறிக்கையின்படி அரசு நாளிதழ் மற்றும் தினசரி பத்திரிக்கைகளில் விளம்பரம் செய்ய வேண்டியுள்ளது.

மேலும் ஒவ்வொரு வார்டுக்கும் தனித்தனியே நகரில் உள்ள காலியிட விபரங்கள் அடங்கிய பிரதான பதிவேடு ( Master Register) தயார் செய்ய வேண்டியுள்ளது. அதற்கான படிவங்கள் மற்றும் பதிவேடுகள் அச்சடிக்க வேண்டியுள்ளது.

மேற்படி விளம்பர செலவினங்களுக்கும் படிவங்கள், பதிவேடுகள் தயார் செய்வதற்கும் ஆகும் செலவினங்களுக்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

விளம்பர செலவினங்களுக்கும் பதிவேடுகள் படிவங்கள் அச்சடிப்பதற்கும் பிரதான பதிவேடு ( Master Register) தயார் செய்வதற்கும் ஆகும் உத்தேச செலவினமாக ரூ 50,000/– மாமன்றம் அனுமதிக்கலாம்.

அ1/ 16231/09

**தீர்மானம் எண்: 190**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

21) இம்மாநகராட்சி பொறியியல் பிரிவு மற்றும் சுகாதார பிரிவில் பராமரிக்கப்பட்டு வரும் வாகனங்களுக்கு 2009–2010ம் ஆண்டிற்கு வாகனவரி பாதுகாப்பு வரி , பசுமைவரி காப்பீட்டு சான்று கட்டணம் புகைச்சான்று கட்டணம் மற்றும் மோட்டார் போக்குவரத்து தொழிலாளர்கள் பதிவுச் சான்று புதுப்பித்தல் வகைக்கு கட்டணம் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு செலுத்தவும் அதுவகைக்கு ஆகும் உத்தேச செலவு ரூ 5,00,000/– (ரூபாய் ஐந்து லட்சம்) க்கும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
**அலுவலகக் குறிப்பு** – மாமன்றம் அனுமதிக்கலாம்.

இ6/5713/2009

**தீர்மானம் எண்: 191**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

22) இம்மாநகராட்சி வடக்கு பத்திரகாளியம்மன் கோவில் தெருவிலுள்ள மாநகராட்சி பள்ளி வடக்கு கட்டிடம் பராமரிப்பு பணி மற்றும் புதிய கழிப்பிடம் கல்வி நிதி திட்டத்தின் கீழ் கட்டுவதற்கு 18–09–2009 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. அவைகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது. மேலும் இப்பணிக்கு 03–09–09ல் ரூ. 900000/–க்கு நிர்வாகஅனுமதி வழங்கப்பட்டுள்ளது.

1.திரு. ஜே. சுரேஷ்ஜெயக்குமார் மதிப்பீட்டிற்கு ரூ. 4.68 % அதிகம் டேவணித்தொகை செலுத்தியுள்ளார்

2.திரு கே. பழனியப்பன் மதிப்பீட்டிற்கு ரூ. 5.31% அதிகம் டேவணித்தொகை செலுத்தியுள்ளார்

**அலுவலகக் குறிப்பு**

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மிக குறைவானதும் மதிப்பீடு விகிதத்திற்கு 4.68 % அதிகமானதுமான திரு.ஜே. சுரேஷ் ஜெயக்குமார் என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை மாமன்றம் ஒப்புக்கொள்ளலாம். மேலும் மேற்க்கண்ட பணிக்கு பொருள்கள் செல்ல மெயின் சாலையிலிருந்து சுமார் 500மீட்டர் தனியாக எடுத்து செல்லவேண்டிய சூழ்நிலை உள்ளது. மேலும் மேற்கண்ட பணி திட்டப்பணியாக இருப்பதால் அவசர அவசியத்தை முன்னிட்டு மேற்க்கண்ட பணிக்கு பெறப்பட்ட குறைந்த ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் ஏற்கலாம்.

ம.ப.எண்.68/09–10

**<u>தீர்மானம் எண்: 192</u>**

அலுவலகக் குறிப்புப்படி ஏற்கப்பட்டது

23) இம்மாநகராட்சி வடக்கு பத்திரகாளியம்மன் கோவில் தெரு மாநகராட்சி பள்ளி தெற்கு கட்டிடம் கல்வி நிதி திட்டத்தின் கீழ் பராமரிப்பு பணி மேற்கொள்ள 18–09–2009 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. அவைகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது. மேலும் இப்பணிக்கு 03–09–09ல் ரூ. 800000/–க்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

1) திரு. ஜே. சுரேஸ் ஜெயக்குமார் மதிப்பீட்டிற்கு ரூ. 4.74 % அதிகம் டேவணித்தொகை செலுத்தியுள்ளார்

2) திரு கே. பழனியப்பன் மதிப்பீட்டிற்கு ரூ. 5.47% அதிகம் டேவணித்தொகை செலுத்தியுள்ளார்

**அலுவலகக் குறிப்பு**

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவானதும் மதிப்பீடு விகிதத்திற்கு 4.74 % அதிகமானதுமான திரு.ஜே. ஜெயக்குமார் என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை மாமன்றம் ஒப்புக்கொள்ளலாம். மேலும் மேற்கண்ட பணிக்கு பொருள்கள் செல்ல மெயின் சாலையிலிருந்து சுமார்500மீட்டர் தனியாக எடுத்து செல்லவேண்டிய சூழ்நிலை உள்ளது. மேலும் மேற்கண்ட பணி திட்டப்பணியாக இருப்பதால் அவசர அவசியத்தை முன்னிட்டு மேற்க்கண்ட பணிக்கு பெறப்பட்ட குறைந்த ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் ஏற்கலாம்.

ம.ப.எண்.69/09–10

**<u>தீர்மானம் எண்: 193</u>**

அலுவலகக் குறிப்புப்படி ஏற்கப்பட்டது

24) இம்மாநகராட்சிக்கு 2008–2009ம் நிதியாண்டிற்கு 12வது மாநில நிதிக்குழுதிட்டத்தின் கீழ் 25 சதவிதம் இதர இனங்களுக்கான முதல் மற்றும் இரண்டாவது தவணை நிதியாக மொத்தம் ரூ 2629238/– ஒதுக்கீடு செய்யப்பட்டது. இம்மாமன்ற தீர்மானம் எண் 176 நாள் 28–11–2008ல் கீழ்க்கண்ட பணிகள் செய்ய அனுமதி வழங்கப்பட்டது.

| வ.எண். | இனங்கள் | ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை (ரூ.லட்சத்தில்) |
|---|---|---|
| 1 | கணணி 10 எண்ணிக்கை | 4.200 |
| 2 | பேக்ஸ் மிஷின் | 0.20 |
| 3 | லைன் பிரிண்டர் | 2.50 |
| 4 | கலர் பிரிண்டர் | 0.50 |
| 5 | நெட் ஒர்க் இணைப்பு | 0.50 |

| | | |
|---|---|---|
| 6 | லேப் டாப் | 0.40 |
| 7 | LCD Projector | 0.40 |
| 8 | லேன் எக்ஸண்டர் | 0.60 |
| 9 | USP 5 KVA | 1.80 |
| 10 | ராஜாஜி பூங்கா கணணி மையம் | 1.30 |
| 11 | கணணி டேபிள் மற்றும் சேர் | 0.70 |
| 12 | Windows server | 0.42 |
| 13 | Rack | 0.28 |
| | மொத்தம் | 13.85 |

மேற்கண்டுள்ள பணிகள் நீங்கலாக 2008–2009 ஆண்டுக்கான மின்கட்டணங்களை செலுத்தவும் மன்றம் அனுமதி வழங்கப்பட்டது.

மேற்கண்ட பணிகளில் கீழ்க்கண்ட விபரப்படி பணிகள் முடிக்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| 1) | கணணி 10 எண்ணிக்கை | ரூ. 381690/– |
| 2) | லைன் பிரிண்டர் | ரூ. 387742/– |
| 3) | கலர் பிரிண்டர் | ரூ.34920/– |
| 4) | லேப்டாப் | ரூ.52500/– |
| 5) | Windows server | ரூ.41900/– |
| 6) | Rack | ரூ. 5500/– |
| 7) | லேசர் பிரிண்டர் | ரூ.15000/– |
| 8) | சி.டி. ரைட்டர் | ரூ.3000/– |
| 9) | ஸ்பீக்கர் | ரூ. 1200/– |
| 10) | 256 எம்.பி.ரேம் | ரூ.1500/– |
| 11) | Projector and screen (Hitachi) | ரூ.185440/– |
| 12) | 2008–2009ல் மின்கட்டணம் | ரூ.896419/– |
| 13) | விவிடி. டேங்அருகில் வசூல் மையம் | ரூ, 125000/– |
| 14) | புதிய பேருந்து நிலைய வளாகத்தில் வசூல் மையம் | ரூ.95000/– |
| 15) | மாட்டுப்பேட்டை வணிகவளாகத்தில் வசூல் மையம் | ரூ.195000/– |
| 16) | 2 லேன் எக்ஸ்டன்டர் | ரூ.16500/– |
| | மொத்தம் | ரூ.2438311/– |

மேற்கண்டுள்ள விபரப்படி ரூ. 2438311/– செலவுத்தொகை நீங்கலாக மீதம் உள்ள தொகை ரூ.190927/–க்கு கூடுதலாக கணணி, பிரிண்டர் மற்றும் UPS (5 KV) வாங்கலாம். செலவின விபரம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும்.

**அலுவலகக் குறிப்பு** – பதிவு செய்யலாம்.

இ1/26600/2008

**<u>தீர்மானம் எண்: 194</u>**

அலுவலகக் குறிப்புப்படி பதிவு செய்யப்பட்டது

25. இம்மாநகராட்சி பகுதியில் உள்ள காரப்பேட்டை நாடார் பள்ளி அருகில் வடிகால் அமைக்கும் பணியை சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாடு திட்டம் 2009–2010ன் கீழ் செய்ய 11–9–2009 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. அவைகளின் ஒப்புநோக்குபட்டியல் மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது. மேலும் இப்பணிக்கு மாவட்ட ஆட்சியர் அவர்களின் கடிதம் எண். அ2/2357/2009ல் ரூ. 3,80,000/–க்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

1) திரு. எஸ். இன்னாசிமுத்து மதிப்பீட்டிற்கு 4.74% அதிகம் டேவணித்தொகை செலுத்தியுள்ளார்.
2) திரு.ஐ. ஜெயசீலன், மதிப்பிட்டிற்கு 4.58% அதிகம் டேவணித்தொகை செலுத்தியுள்ளார்.

**அலுவலகக் குறிப்பு** – வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் ஒப்பந்தக்காரர் திரு. ஐ. ஜெயசீலன் மதிப்பீட்டை விட 4.58 % அதிகமாக கொடுத்துள்ளார். மேலும் இப்பணி திட்டப்பணியாக இருப்பதால் உள்ளூர் மார்க்கட் விலை விகிதம் அதிகமாக இருப்பதாலும் பணியின் அவசர அவசியம் கருதி பொறியர் கையேடு பக்கம் எண்.9 பத்தி எண் 2.7.2ல் தெரிவிக்கப் பட்டுள்ளபடி மதிப்பீட்டை விட அதிகமான விலைவிகிதம் 5% க்கு குறைவாக உள்ளதால் மதிப்பீட்டை விட4.58 சதவிகிதம் மட்டும் அதிகமாக கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் அங்கீகரிக்கலாம்.

ம.ப.எண்.64/2009–10

**<u>தீர்மானம் எண்: 195</u>**

அலுவலகக் குறிப்புப்படி அங்கீகரிக்கப்பட்டது

26. இம்மாநகராட்சி வார்டு எண்.38 மீனாட்சிபுரத்தில் பொதுவிநியோகக் கடை கட்டும் பணியை பணியை சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாடு திட்டம் 2009–2010ன் கீழ் செய்ய 11–9–2009 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. அவைகளின் ஒப்புநோக்குபட்டியல் மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது. மேலும் இப்பணிக்கு மாவட்ட ஆட்சியர் அவர்களின் கடிதம் எண். அ2/2357/2009ல் ரூ. 3,25,000/–க்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

1) திரு. கே. வேலாயுதம் மதிப்பீட்டிற்கு 4.99% அதிகம் டேவணித்தொகை செலுத்தியுள்ளார்.
2) திரு.வி. தங்கராஜ் மதிப்பிட்டிற்கு 5.38% அதிகம் டேவணித்தொகை செலுத்தியுள்ளார்.

**அலுவலகக் குறிப்பு** – வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் ஒப்பந்தக்காரர் திரு. கே. வேலாயுதம் மதிப்பீட்டை விட 4.99 % அதிகமாக கொடுத்துள்ளார். மேலும் இப்பணி திட்டப்பணியாக இருப்பதாலும் உள்ளூர் மார்க்கட் விலைவிகிதம் அதிகமாக இருக்கின் காரணத்தினால் பணியின் அவசர அவசியம் கருதி பொறியர் கையேடு பக்கம் எண்.9 பத்தி எண் 2.7.2ல் தெரிவிக்கப்பட்டுள்ளபடி மதிப்பீட்டை விட அதிகமான விலைவிகிதம் 5% க்கு குறைவாக உள்ளதால் மதிப்பீட்டை விட 4.99% மட்டும் அதிகமாக கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் அங்கீகரிக்கலாம்.

ம.ப.எண்.63/2009–10

**<u>தீர்மானம் எண்: 196</u>**

அலுவலகக் குறிப்புப்படி அங்கீகரிக்கப்பட்டது

27. தூத்துக்குடி பத்திரிக்கையாளர் மன்றத்தின் சார்பில் தூத்துக்குடி ஜெயராஜ் சாலையில் சுந்தரம் அருள்ராஜ் மருத்துவமனைக்கு மேற்கே பத்திரிக்கையாளர் மன்றம் கட்டிடம் கட்ட அரசு புறம்போக்கு நிலம் குத்தகை அடிப்படையில் வழங்கக் கோரி விண்ணப்பம் வரப்பெற்றுள்ளது. சுந்தரம் அருள்ராஜ் மருத்துவமனைக்கு மேற்கே அரசு புறம்போக்கு நிலம் ஏதும் இல்லை. மாநகராட்சி பகுதிக்குட்பட்ட ஜெயராஜ் ரோடு விவிடி.ரோடு சந்திப்பின் கிழக்குப் பகுதியில் ரோடு மூலைவிட்டம் (Road Splay) இடம் வார்டு எண்.4 பிளாக் எண்.21 எ. சர்வே எண்.3060/1 ல் உள்ள இடத்தில் 352 சதுர மீட்டர் பரப்பளவில் இடம் உள்ளது. மேற்படி இடத்தை பத்திரிக்கையாளர் மன்றத்திற்கு குத்தகை அடிப்படையில் வழங்குவது குறித்து அரசின் அனுமதி பெற வேண்டியுள்ளது. எனவே தூத்துக்குடி பத்திரிக்கையாளர் மன்றம் சார்பில் வரப்பெற்ற விண்ணப்பம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு –** மன்றத்தின் அனுமதி பெற்று அரசுக்கு கருத்துரு அனுப்பலாம்.

எப்1/16007/2009

**<u>தீர்மானம் எண்: 197</u>**

அரசின் அனுமதிக்கு கருத்துரு அனுப்ப தீர்மானிக்கப்பட்டது.

மாமன்றம், தூத்துக்குடி
நாள் 9–10–2009

மேயர்
மாமன்றம், தூத்துக்குடி.